# NSW HEALTH

## COVID-19 Key Points - Friday 30 July 2021

- நேற்று இரவு 8 மணிக்கு முன்னரான 24 மணிநேரத்தில், 170 புதிய கோவிட்-19 உள்ளூர் நோய்த்தொற்றுக்கள் நியூ சவுத் வேல்ஸ்-இல் பதிவாகியுள்ளன. குறைந்தது 42 நோய்த்தொற்றாளர்கள் சமூகத்தில் தொற்று விளைவிக்கக்கூடியவர்களாக இருந்துள்ளனர், அத்துடன் 53 நோய்த்தொற்றாளர்களின் தனிமைப்படுத்தல் நிலைமை குறித்து விசாரணை மேற்கொள்ளப்படுகிறது.
- மருத்துவ பராமரிப்பை நாடவோ, அல்லது கோவிட்-19 பரிசோதனையைச் செய்யவோ பயப்பட வேண்டாம்.
- உங்களுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் இருந்தால், எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாகப் பரிசோதனையைச் செய்யுங்கள். கோவிட் -19 பரிசோதனையை மேற்கொள்வதற்காக உங்கள் வீட்டை விட்டு வெளியேற நீங்கள் அனுமதிக்கப்படுகிறீர்கள்.
- நீங்கள் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக உணர்ந்தால், பராமரிப்பைப் பெற்றுக்கொள்ளத் தயங்க வேண்டாம். மக்கள் மிக விரைவாக சுகாதாரப் பராமரிப்பை அணுகாததால்தான் இறந்து கொண்டிருக்கிறார்கள். முடிந்தவரை, நீங்கள் உங்கள் மருத்துவரிடமோ அல்லது மருத்துவமனைக்கோ செல்லும் முன்னர், அவர்களுக்குத் தொலைபேசி அழைப்புவிடுக்க மறக்காதீர்கள்.
- உங்களுக்கு ஏதேனும் நோய் அறிகுறிகள் இருந்தால், ஒரு மருந்தகத்திற்கோ அல்லது மருத்துவரிடமோ தயவுசெய்து செல்ல வேண்டாம். தயவுசெய்து பரிசோதனையைச் செய்யுங்கள்.
- உங்களது நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை, அதிலும் குறிப்பாக எங்கள் சமூகத்தில் உள்ள வயதானவர்களை, நீங்கள் தொடர்புகொள்வதை உறுதிசெய்யுங்கள். பொதுமுடக்கம் (lockdown) ஏற்படுவதற்கு முன்னர், நீங்கள் யாரையாவது தவறாமல் சென்று பார்வையிட்டுக்கொண்டிருந்தீர்கள் என்றால், தயவுசெய்து தொலைபேசியை எடுத்து அவர்களுக்கு ஒரு அழைப்பு விடுங்கள். என்ன நடக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவும், இந்த கடினமான நேரத்தில் பாதுகாப்பாக இருக்கவும் அவர்களுக்கு உதவுங்கள்.
- தடுப்பூசிக்கான ஒரு சந்திப்பைப் பதிவுசெய்ய உங்கள் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் உதவுங்கள் - தடுப்பூசித் தகுதிக்கான சரிபார்ப்பி (Vaccine Eligibility Checker) அல்லது ஹாட் டாக் (Hot Doc) மூலம், உங்களுக்கு அருகாமையில் இருப்பவற்றை நீங்கள் கண்டறியலாம்.
- உங்களுக்கு நிதி உதவி தேவைப்பட்டால், சேவைகள் ஆஸ்திரேலியாவை (Services Australia) பார்வையிடுங்கள்.